[1973 ஆகஸ்ட் 7

திரு. கோவை செழியன் : தமிழ் நாட்டில் மருந்து ஆராய்ச்சி நிலையம் சரியான முறையில் விஞ்ஞானத் துறை, ரிசர்ச் போல் பணியாற்றவில்லை என்ற ஒரு குறை இருந்து வருகிறது. தஞ்சை சரஸ்வதி மஹாலிலிருந்துதான் சர்பகந்தி பூவிலிருந்து (Sar Pasil) என்ற மருந்தை ஜெர்மனியர் கண்டுபிடித்தார்கள். இது உலகம் பூராவுக்கும் பயன்படுகிறது. அதே மாதிரி பிக்காணிப் பூவிலிருந்து Vinkarosia, Vin Blastine and Vin Cristine என்ற மருந்துகளை ரத்த கான்ஸருக்கு Lekaremia அமெரிக்கர் கண்டு பிடித்தனர். தமிழ் நாட்டிலிருந்து கற்றுக்கொண்டு அவர்கள் கொள்ளை லாபம் அடித்துக்கொண்டு போகிறார்கள். ஜெனரல் ஆஸ்பத்தியில் அதற்கெல்லாம் டாக்டர் இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் ஒரு ரிசர்ச் ஸ்டேஷன் இயங்கி வருகிறது. அவர்களைக் கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். நிறைய பணத்தைக் கொடுத்து வேறு சித்த வைத்தியர்களையும் மற்ற வைத்தியர்களையும் அமர்த்தி அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தால் அது ஒரு நல்ல ரிசர்ச் செண்டர் ஆகும். இதை அரசு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் ஆர்வத்தை அமைச்சர் என்ற முறையில் நான் பாராட்டுகிறேன். இப்படி ஆர்வம் உள்ள அங்கத்தினர்கள் தாங்கள் வைத்தியம் செய்து கொள்ளும்பொழுது சித்த வைத்திய முறைப்படி வைத்தியம் செய்துகொள்ள முன்வந்தால், சித்த வைத்திய மருத்துவர்களுடைய மதிப்பும் அதிகம் உயரும். ஆகவே, இப்படிப்பட்ட அங்கத்தினர்கள் சித்த வைத்திய முறையின்படி சிகிச்சை செற்றுக் கொள்வது அந்த வைத்திய முறைக்கு அளிக்கும் மதிப்பாகும். ஆராய்ச்சி பல்வேறு நிலையில் பல்வேறு கட்டத்தில் வெவ்வேறு அமைப்புகளில் நடைபெற்று வருகிறது. அவற்றையெல்லாம் தொகுத்து, தேவைப்படும்பொழுது அவைக்குத் தெரிவிக்கப்படும்.

பள்ளபட்டி அரசு மருத்துவ மனை.

* 55. வினா—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளபட்டி அரசு மருத்துவ மனையில் தற்போதுள்ள படுக்கை வசதிகள் எத்தனை ?

(இ) இதை அதிகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

1973 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 12.

(இ) இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : இந்த மருத்துவமனை சுற்றுவட்டாரத்தில் 20 மைலுக்கு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. நல்ல முறையில் டாக்டர்கள் பணி புரிந்து வருகிறார்கள் இனியாவது இந்த ருத்துவமனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து படுக்கை வசதியை அதிகரிக்க உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: படுக்கை வசதி என்பது தனியாகப் படுக்கைகளை மட்டும் போட்டுவிடுவது என்பது அல்ல. இட வசதி தேவை. இரண்டாவதாக இட வசதிக்குப் பின்னர் படுக்கை வசதி அதிகரிப்பதற்கேற்ப, அலுவலர்கள் எண்ணிக்கை அதிகப்படும். ஆகவே, இது படிப்படியாக தேவைக்கேற்ப செய்யப்படும். அண்மையில் அங்கே ஒரு எக்ஸ்ரே பிளாக் கட்டப் பட்டு, அந்தக் கருவி பொருத்தப்பட்டிருக்கிறது. எனவே இப்படி ஆண்டுதோறும் பல்வேறு வகையில் வளர்ச்சி ஏற்பட வழி செய்யப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அமைச்சர் அவர்கள் எக்ஸ்ரே அலுவலகம் கட்டப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் அங்கே அதற்கு எந்தவிதமான வேலையும் துவக்கப்படவில்லை. இனியாவது உடனடியாகத் துவக்கப்படுவதற்கு ஆவன செய்து அமைச்சர் உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உத்தரவு 16–3–73-ல் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு வேலை கண்டிராக்டர் இன்னும் சரியானபடி கிடைக்காமல் இருக்கலாம். எம்.எல்.ஏ. அவர்கள் அந்த வகையில் உதவி செய்யலாம்.

Microphone, etc., for Primary Health Centres

* 56 *Q.*—THIRU N. DENNIS
THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether Microphone, amplifier and record players have been purchased by the Health Services and Family Planning Department for the Primary Health Centres during 1973; and

(*b*) if so, the details thereof?